**செய்தி வெளியீடு எண் : 291** **நாள்: 28.02.2022**

**<u>செய்தி வெளியீடு</u>**

**<u>இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்களையும், அவர்தம் மீன்பிடிப் படகுகளையும் உடனடியாக விடுவித்திட நடவடிக்கை மேற்கொள்ள ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சகத்திற்கு உத்தரவிடக் கோரி, மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் கடிதம்</u>**

இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ள மீனவர்கள் மற்றும் அவர்களது மீன்பிடிப் படகுகளை உடனடியாக விடுவித்திட ஏதுவாக, இலங்கை அதிகாரிகளிடம் இதுகுறித்து விவாதித்திட ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சகத்திற்கு உத்தரவிடுமாறு வலியுறுத்தி, மாண்புமிகு இந்தியப் பிரதமர் திரு. நரேந்திர மோடி அவர்களுக்கு, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. மு.க. ஸ்டாலின் அவர்கள் இன்று (28-2-2022) கடிதம் எழுதியுள்ளார்.

மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் எழுதியுள்ள கடிதத்தில், தமிழக மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் மீண்டும் மீண்டும் துன்புறுத்தப்படுவதையும், கைது செய்யப்படுவதையும் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்களின் உடனடி கவனத்திற்கு கொண்டுவர விழைவதாகத் தெரிவித்துள்ளார். நாகப்பட்டினம் மாவட்டத்தைச் சேர்ந்த 9 மீனவர்கள் தங்களது இயந்திர மீன்பிடிக் கப்பலில் (பதிவு எண் IND-TN-06-MM-6824) 24-2-2022 அதிகாலையில் பாக் வளைகுடா பகுதியில் மீன்பிடித்துக் கொண்டிருந்தபோது இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டு, இலங்கை யாழ்ப்பாணத்திலுள்ள மயிலாட்டி தளத்திற்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளதாகவும், புதுச்சேரி, காரைக்கால் பகுதியைச் சேர்ந்த 13 மீனவர்கள் மற்றொரு மீன்பிடிப் படகில் (பதிவு எண் IND-PY-PK-MM-1370) மீன்பிடிக்கச் சென்றபோது, இலங்கைக் கடற்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும், அதேபோன்று, 26-2-2022 அன்று இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து இயந்திரப் படகில் மீன்பிடிக்கச் சென்ற 8 மீனவர்கள் 27-2-2022 அதிகாலையில் இலங்கைக் கடற்படையினரால் கைது

செய்யப்பட்டு இலங்கையிலுள்ள கிராஞ்சிக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளனர் என்றும் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தனது கடிதத்தில் குறிப்பிட்டுள்ளார்.

நமது மீனவர்கள் இலங்கைக் கடற்படையினரால் குறுகிய கால கட்டங்களில் தொடர்ந்து இதுபோன்று எதிர்கொள்ளும் துன்புறுத்தல்கள் மிகுந்த மனச்சோர்வை ஏற்படுத்துவதாகக் குறிப்பிட்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், மீனவர்கள் துன்புறுத்தப்படும் நிகழ்வுகளும், கைது செய்யப்படும் நிகழ்வுகளும் அதிகரித்து வருகின்றன என்பதைக் குறிப்பிட்டு தமிழ்நாடு அரசின் சார்பில் பலமுறை கடிதங்கள் அனுப்பப்பட்டுள்ளபோதிலும் இந்த நிலை தொடர்வதாகத் தனது கடிதத்தில் சுட்டிக் காட்டியுள்ளார். பாக் வளைகுடாவில் தமிழக மீனவர்களின் பாரம்பரிய மீன்பிடி உரிமைகளைப் பறிக்கும் வகையிலான இலங்கைக் கடற்படையினரின் இத்தகைய நடவடிக்கைகள், ஒன்றிய அரசின் ஒருங்கிணைந்த முயற்சிகளின் மூலம் நிரந்தரமாக முடிவுக்குக் கொண்டுவரப்பட வேண்டுமென்று மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுக் கொண்டுள்ளார்.

தொடர்ந்து மீனவர்கள் கைது செய்யப்படுவதும், அவர்களது படகுகள் சிறைபிடிக்கப்படுவதும், மீனவ சமூகத்தினரிடையே மிகுந்த விரக்தியை ஏற்படுத்தியுள்ளது என்று குறிப்பிட்டுள்ள மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள், இந்த விவகாரத்தில் மாண்புமிகு இந்தியப் பிரதமர் அவர்கள் நேரடியாகத் தலையிட்டு, மீனவர்கள் மற்றும் அவர்களது மீன்பிடிப் படகுகளை உடனடியாக விடுவிக்கும் வகையில், இப்பிரச்சினையை இலங்கை அதிகாரிகளின் கவனத்திற்குக் கொண்டு செல்ல ஒன்றிய வெளியுறவு அமைச்சகத்திற்கு உத்தரவிட வேண்டுமென்று தனது கடிதத்தில் கேட்டுக்கொண்டுள்ளார்.

- - - - -

**P.R.No: 291** **Date: 28.02.2022**

**Text of D.O. Letter** of Hon'ble Chief Minister of Tamil Nadu dated **28-2-2022 to** Hon'ble Prime Minister of India Thiru**.** Narendra Modi requesting his personal **intervention in release of apprehended fishermen in Srilanka.**

I wish to draw your immediate attention to repeated instances of harassment and arrest of fishermen from Tamil Nadu by the Sri Lankan Navy. Nine fishermen from Nagapattinam District along with their mechanized fishing vessel bearing Registration No.IND-TN-06-MM-6824 were arrested by the Sri Lankan Navy while they were fishing in the Palk Bay area, in the early hours of 24-2-2022 and taken to Mylatti base, Jaffna, Sri Lanka. It is also learnt that another fishing boat from Karaikal, Puducherry, bearing Registration No.IND-PY-PK-MM-1370 with 13 fishermen (8 from Tamil Nadu) was also apprehended by the Sri Lankan Navy. Again, on 26-2-2022, eight fishermen who ventured for fishing from Ramanathapuram District in a mechanized fishing vessel were apprehended by the Sri Lankan Navy, in the early hours of 27-2-2022 and taken to Kiranchi, Sri Lanka.

It is highly disheartening to note that our fishermen are facing harassment at the hands of the Sri Lankan Navy at an alarming frequency. It continues despite several letters having been sent from Government of Tamil Nadu highlighting the escalation of such instances of harassment and arrest of our fishermen. The repeated attempts by the Sri Lankan Navy to infringe on historic fishing rights of Tamil Nadu fishermen in the Palk Bay has to be permanently ended through concerted efforts by the Government of India.

The continued incarceration of the fishermen and their boats has created a deep sense of despondency among the fishermen community.

I urge your personal intervention in this matter and request you to direct the Ministry of External Affairs to take up the matter with Sri Lankan authorities so as to secure the immediate release of the fishermen and their fishing boats.

\- - - - - -

**Issued By: - DIPR, Secretariat, Chennai - 9.**